රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Services, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/අන්තර්ග්‍රහණය
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2022.04.08

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்வாங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரம் உயர்வு</u>**

மேற்படி விடயம் தொடர்பாக எனது இணையிலக்கம் மற்றும் 2020.07.20 ஆந் திகதிய கடிதத்திற்கு மேலதிகமாக.

02. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 16/2010 வெளியிடப்படுவதற்கு முன்னர், ஒரு தொடர்புடைய சேவையைச் சேர்ந்த பதவியில் இருந்து தொடர்புடைய மற்றொரு சேவையைச் சேர்ந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்குதல் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் உயர்வுகளை வழங்குவதில் உத்தியோகத்தரின் முதலாவது நியமனம் தொடர்பில் பதவியேற்ற நாளிலிருந்து தொடர்ச்சியான சேவைக் காலத்தை கணக்கிடுவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் PSC/EST/05-05/03/2018 ஆம் இலக்க மற்றும் 2021.02.08ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகிறேன்.

உ-ம் :- 2005.07.01ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கல்வி அமைச்சில் திட்டமிடல் / நிதி உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் 2005.07.20 அன்று அந்த அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். அதனைத் தொடர்ந்து, அந்த உத்தியோகத்தர் 2006.08.01 முதல் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் கணக்கு உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 2006.08.10 அன்று அந்த அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்று அன்றைய தினம் முதல் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார். எனவே இந்த உத்தியோகத்தரின் முதலாவது நியமனம் தொடர்பில் பதவியேற்ற நாளான 2005.07.20 ஆந் திகதி முதல் தொடர்ச்சியான சேவைக் காலம் இருப்பின் 10 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்யும் 2015.07.20 ஆந் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் II இற்கு தரம் உயர்வு பெறுவதற்கான குறைந்தபட்ச சேவைக் காலத்தை பூர்த்திசெய்துள்ளதாக கருதி செயற்பட முடியும்.

03. அத்தகைய உத்தியோகத்தர்கள் தமது முதல் பதவியிலிருந்து முறையாக விடுவிக்கப்பட்டதன் பின்னர் எவ்வித சேவை இடையறுதலும் இன்றி புதிய பதவியில் கடமைகளைப் பொறுப்பேற்றிருக்க வேண்டும் என்பதுடன், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுதல் அல்லது தரம் உயர்வு தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் போது உத்தியோகத்தரின் முதல் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து இற்றைப்படுத்தப்பட்ட வரலாற்றுத்தாள் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதையும் மேலும் அறியத்தருகிறேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்